தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மார்கழி 23, திருவள்ளுவர் ஆண்டு–2052

2022 ஜனவரி 7, வெள்ளிக்கிழமை

சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சா னவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது."

சொல்லாற்றல் படைத்தவனாகவும், சோர்வு அறியாதவனாகவும், அஞ்சா நெஞ்சங் கொண்டவனாகவும் இருப்பவனை எதிர்த்து எவராலும் வெல்ல முடியாது.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ், மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

11—

தூண்டில் வளைவு

***1163—திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சாமந்தன்பேட்டை கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *நாகப்பட்டினம் மாவட்டம், சாமந்தன்பேட்டையில் தூண்டில் வளைவு அமைக்க அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.*

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், சாமந்தன்பேட்டையில் தூண்டில் வளைவு அமைக்க வேண்டுமென்பது அந்த மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை. அந்தக் கோரிக்கையை ஏற்று, அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதை வரவேற்கிறோம். அதற்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அது ஆய்வு நிலையில் இருக்கிறது. அந்தப் பணியை விரைந்து முடித்து, திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அங்கே நாகூர் பட்டினச்சேரி, நம்பியார் நகர் போன்ற கடற்கரைக் கிராமங்கள் கடலரிப்பால் பாதிக்கப்படுகின்றன. கடலரிப்பைத் தடுப்பதற்கு கற்களைக் கொட்டி விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்; அங்கே அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், சாமந்தன்பேட்டை கிராமத்தில் 500—க்கும் மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் வசித்து வருகின்றன. அங்கு சுமார் 170 நாட்டுப் படகுகளும், 26 விசைப் படகுகளும் மீன்பிடித்*

2022 ஜனவரி 7]

தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. இப்படகுகள் அருகில் உள்ள நாகப்பட்டினம் மாவட்டம், அக்கரைப்பேட்டை மீன்பிடித் துறைமுகத்தை தங்குதளமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. இத்துறைமுகத்திலும் இடநெருக்கடி உள்ளதால் சாமந்தன்பேட்டை மீனவர்கள் குறிப்பாக, மழை மற்றும் புயல் காலங்களில் தங்கள் படகுகளை சாமந்தன்பேட்டை கிராமத்திலே நிறுத்தி வைப்பதற்குக் கோரிக்கை வைத்துள்ளனர். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாமந்தன்பேட்டையில் தூண்டில் வளைவு அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று கோரியுள்ளார். ஆனால், தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், மீனவர்களுடைய கோரிக்கையினை ஏற்று, சாமந்தன்பேட்டை கிராமத்தில் தூண்டில் வளைவுடன்கூடிய சிறு மீன்பிடித் துறைமுகம் ஒன்றை அமைக்க ஆய்வுப் பணி மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.*

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நடவடிக்கைகளுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், சாமந்தன்பேட்டை கிராமத்தில் தூண்டில் வளைவுடன்கூடிய சிறு மீன்பிடி துறைமுகம் ஒன்றை அமைப்பதற்காக 15 இலட்சம் ரூபாய் செலவில் சென்னை, இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தால் (I.I.T.) விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக அரசாணை எண் 256, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை, நாள் 29—9—2021—ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்திய தொழில்நுட்ப நிறுவனம்—I.I.T. ஆய்வுப் பணிகளைத் துவங்கியுள்ளது. இந்த ஆய்வறிக்கையின் அடிப்படையில், விரிவான திட்ட மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர்*

அவர்களுடைய அனுமதி பெற்று, பணிகள் துவங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தைத் திருநாள் தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன்.*

திருவிடைமருதூர் தொகுதியில் மூன்றாவது முறை நின்று, தொடர்ந்து இந்தத் தொகுதி மக்களுடைய பிரச்சினைகளை எழுப்புவதற்கு வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி. தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், அணைக்கரையில் கொள்ளிடம் ஆற்றங்கரை இருக்கிறது. அணைக்கரை என்பது மூன்று மாவட்டங்களை இணைக்கிற பகுதி. அரியலூர் மாவட்டம், காக்களூர், கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்குடி, தஞ்சை மாவட்டம், திருப்பனந்தாள் ஒன்றியம் ஆகிய பகுதிகளைச் சார்ந்த நூற்றுக்கணக்கான உள்நாட்டு மீனவர்களுக்காக அங்குதான் மீன்களை விற்க, வாங்க ஒரு சந்தை அமைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து கோரிக்கை எழுந்த காரணத்தால், நான் முதல் முறை சட்டமன்ற உறுப்பினரானபொழுது, ஒரு மீன் சந்தைக் கட்டடம் கட்டித் தந்திருக்கிறேன். தொடர்ந்து குளிர்சாதன அறை வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தவண்ணம் இருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு நாங்கள் அமைத்துத் தந்திருக்கிற அந்த மீன் சந்தைக் கட்டடத்தில் குளிர்சாதன அறை அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

2022 ஜனவரி 7]

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய உள்நாட்டு மீனவர்கள் மீன்பிடிக்கிற அணைக்கரை கிராமத்தில், உறுப்பினர் கேட்கின்ற கோரிக்கையை எங்கள் துறை அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்து, அதற்கான பணிகளை இந்த வருடமே செய்து தருவதற்கான நடவடிக்கைகளை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு.* G.V. *மார்க்கண்டேயன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

12—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***4168—திரு. G.V. மார்க்கண்டேயன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *விளாத்திகுளத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் என்பது கோவில்பட்டியிலிருந்து 34 கிலோ மீட்டர் தொலைவிலே உள்ளது. பேருந்து வசதி அதிகம் இருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய வாகனப் போக்குவரத்து, ஓட்டுநர் உரிமங்களின் எண்ணிக்கை போன்றவற்றைப் பொறுத்து புதிய வட்டாரப் போக்குவரத்துக் அலுவலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை அரசு ஆராயும். தற்பொழுது அங்கே வாகனப் போக்குவரத்து மிகவும் குறைவாக இருப்பதால் விளாத்திகுளத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* G.V. *மார்க்கண்டேயன் அவர்கள்.*